# திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை:- திருமதி.எ.சுந்தரவல்லி., இ.ஆ.ப.,

ந.க.11937/2016/ஆ2,

நாள்:15 .06.2016.

பொருள்: நிலம் - திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி வட்டம் - பசியாவரம்-பழவேற்காடு இடையே மேம்பாலம் கட்டுவதற்கு வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை நில எடுப்பு செய்வதற்கு ஈடாக கோளூர்-3 மதுரா புதுச்சேரிமேடு கிராமம் - நன்செய் அனாதீனம் புறம்போக்கு புல எண் 435-ல் 21.95.5 ஹெக்டேரில் 2.22.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு மாற்று இடம் வழங்க தேர்வு செய்தது - உத்தரவு பிறப்பித்தல் - தொடர்பாக.

படிக்க:

1. மாவட்ட வருவாய் அலுவலர் திருவள்ளூர் அவர்களின் நக.3199-1/2011 ஆ2/நாள் 22.06.2012
2. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு திருவள்ளூர் கோட்டம் கடித எண். 5737/2007-8/JDO-3, நாள்: 11.05.2016.
3. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 21199/2013 (Suo-motu PIL), நாள்: 21.03.2016.
4. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் உத்திரவு நகல்.
5. வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி அவர்களின் ந.க.1985/2016/ஆ1, நாள்: 14.06.2016.
6. வட்டாட்சியர், பொன்னேரி ந.க. எண். 1304/2016/ஆ1 நாள்: 14.06.2016.

----------

**ஆணை:**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பசியாவரம்-பழவேற்காடு மேம்பாலம் கட்டுவதற்கு, வனத்துறைக்கு சொந்தமான நிலத்தினை நில எடுப்பு செய்வதற்கு வனத்துறைக்கு கோளூர்-3 மதுரா புதுச்சேரி கிராமத்தில் அதற்கு ஈடாக மாற்று இடம் வழங்க கோரியது தொடர்பாக விசாரணை மற்றும் புலத்தணிக்கை செய்து வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி மற்றும்

Scanned by CamScanner

வட்டாட்சியர், பொன்னேரி அவர்கள் கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பசியாவரம்-பழவேற்காடு மேம்பாலம் கட்டுவதற்கு வனத்துறைக்கு சொந்தமான நிலத்தினை நில எடுப்பு செய்ததற்கு மாற்று இடம் வழங்கும்பொருட்டு கும்மிடிப்பூண்டி வட்டம், ஈகுவார்பாளையம் கிராமம், கல்லாங்குத்து புறம்போக்கு புல எண் 205-ல் மொத்த விஸ்தீரணம் 13.47.0 ஹெக்டேர் நிலத்தில் 2.22.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. மேற்படி வனத்துறையினர் மாற்று இடமாக வழங்கப்பட்ட புலத்தினை புலத்தணிக்கை செய்ததில் மாற்று இடமாக வழங்கப்பட்ட இடம் பழவேற்காடு பறவைகள் சரணாலயத்திற்கு உகந்த இடம் அல்ல எனக்கூறி மற்றொரு இடத்தினை தேர்வு செய்து வழங்கிடுமாறு கோரியுள்ளனர். எனவே ஏற்கனவே பார்வை 1ல் வழங்கப்பட்ட நில மாற்ற ஆணையை இதன் மூலம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

தற்போது பொன்னேரி வட்டத்தில் கோளூர்-3 மதுரா புதுச்சேரி மேடு கிராமத்தில் கீழ்க்கண்ட புலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட புலம் கிராமக்கணக்குகளில் கீழ்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

| வ.எண் | புல எண் | விஸ்தீரணம் | வகைபாடு |
|---|---|---|---|
| 1 | 435 | 21.95.5 | நன்செய் அனாதீனம் |
| **மொத்தம்** | | 21.95.5 | |

வனத்துறைக்கு மாற்று இடம் அளிக்க கோரியது தொடர்பாக கடந்த 25.05.2016 அன்று கோளூர்-3 கிராமத்தில் அ1 நோட்டீஸ் மற்றும் பொது விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டதில் 15 தினங்களுக்குள் கிராம பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. இதனையடுத்து கடந்த 08.06.2016 அன்று பிரஸ்தாப புலம் வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி மற்றும் வட்டாட்சியர் பொன்னேரி ஆகியோரால் புலத்தணிக்கை செய்யப்பட்டது.

வனத்துறைக்கு மாற்று இடம் வழங்கக்கூடிய புலம் கீழ்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

| வ.எண் | புல எண் | மொத்த விஸ்தீரணம் | மாற்று இடம் வழங்கப்படும் விஸ்தீரணம் | வகைபாடு |
|---|---|---|---|---|
| 1 | 435 | 21.95.5 | 2.22.0 | நன்செய் அனாதீனம் |
| மொத்தம் | | 21.95.5 | 2.22.0 | |

**பிரஸ்தாப புலத்தின் நான்கு புற எல்லைகள் விவரம்**

| பிரஸ்தாப புல எண் | வடக்கு | தெற்கு | மேற்கு | கிழக்கு |
|---|---|---|---|---|
| 435 | புல எண் 435-ன் மிகுதி நிலம் | புல எண் 444 | புல எண் 442 | புல எண் 435-ல் அடங்கிய புதுச்சேரிமேடு-தொட்டிமேடு சாலை |

**நில மதிப்பு:**

வனத்துறைக்கு மாற்று இடம் அளிப்பது தொடர்பாக மேற்கண்ட புல எண்ணிற்கு நில மதிப்பு நிர்ணயம் செய்ய பொன்னேரி சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அரசின் வழிகாட்டி மதிப்பினை பரிசீலனை செய்ததில் புல எண் 444-ல் ஏக்கர் 1-க்கு ரூ.15,00,000/- என உள்ளது. இதனையே நில மதிப்பு நிர்ணயம் செய்ய மாதிரிப்புலமாக தேர்வு செய்யப்பட்டது. இதனடிப்படையில் நில மாற்றம் செய்யப்படும் 2.22.0 ஹெக்டேர் (5.48 ஏக்கர்) நிலத்தின் மதிப்பு 5.48*15,00,000 வீதம் ரூ.82,20,000/- (ரூபாய் எண்பத்து இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) உள்ளது எனத் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதன் தொடர்பாக மேற்படி புலம் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலரால் .06.2016 புலத்தணிக்கை செய்யப்பட்டது. புலத்தணிக்கையின்போது வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி வட்டாட்சியர் பொன்னேரி, வருவாய் ஆய்வாளர் கோளூர், கோளூர்-3 கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்ட சார் ஆய்வாளர் பொன்னேரி ஆகியோர் உடனிருந்தனர். பிரஸ்தாப புலம் ஆக்ரமணம் ஏதுமின்றி காலியாக உள்ளது. பிரஸ்தாப புலத்தில் விலையுயர்ந்த மரங்களோ, புராதன நினைவு சின்னங்களோ ஏதுமில்லை. மேலும், பிரஸ்தாப புலத்தில் உயர் மற்றும் குறை மின்னழுத்தக்கம்பிகள் ஏதும் செல்லவில்லை.

Scanned by CamScanner

**நிபந்தனைகள்** :

1) கேட்புத்துறையிடமிருந்து கல் கட்டணம், உட்பிரிவு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் வசூல் செய்யப்பட வேண்டும்.
2) மேற்படி நிலம் எந்த நோக்கத்திற்காக நிலமாற்றம் செய்யப்படுகிறதோ, அந்த பயன்பாட்டிற்கு மட்டுமே கேட்புத்துறை பயன்படுத்த வேண்டும்
3) கேட்புத்துறை கோரிய நிலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நீண்டகாலம் பயன்படுத்த தேவையில்லாமல் இருந்தால், அதனை வருவாய்த்துறைக்கு திருப்பி அளிக்க வேண்டும்.

எதிர் வரும் காலத்தில் ஏதேனும் அரசால் விதிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளையும் கேட்புத்துறை கடைப்பிடிக்க வேண்டும்.

எனவே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், கோளூர்-3 மதுரா புதுச்சேரி கிராமம், நன்செய் அனாதீனம் புறம்போக்கு புல எண் 435-ல் மொத்த விஸ்தீரணம் 21.95.5 ஹெக்டேர் நிலத்தில் 2.22.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- ஏ. சுந்தரவல்லி
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவள்ளூர்.

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (நிலம்)பொ
திருவள்ளூர் & மாவட்டம்.

பெறுநர்:

1. கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை),
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
திருவள்ளூர் கோட்டம்.
2. மாவட்ட வன அலுவலர்
திருவள்ளூர் மாவட்டம்.
3. வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி.
4. வட்டாட்சியரி, பொன்னேரி. (கிராம கணக்குகளில் பதிவு மாற்றம் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியது)

Scanned by CamScanner